# DEPOSITION OF WITNESS
# CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
# IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No.91/2013

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : கணேசன் | Father's/Husband's Name : | சிங்கராஜ் |
| Village | : நந்தனாபுரம் | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.03.2026

**1, 4 முதல் 9, 14 முதல் 20 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் எனது அத்தையின் கணவர் மற்றும் அவரது பிள்ளைகள், பேரபிள்ளைகள் மீது வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரி வழக்குதாக்கல் செய்திருக்கிறேன் என்றால் தாவா சொத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளார்கள் அதை நீக்கி சொத்தை எங்கள் வசம் ஒப்படைக்க வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம். தாவா சொத்தில் மாமரம், தென்னை மரம் , உலகமரம் இருக்கிறது என்றால் சரிதான். தாவா சொத்தில் போர்வெல் இருக்கிறது. 3 ம் பிரதிவாதி 2 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றால் சரிதான். தாவா சொத்து இருக்கும் கிராமத்தில் தான் நான் பிறந்ததிலிருந்தே குடியிருக்கிறேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் தான் 3 ம் பிரதிவாதியின் சடலத்தை அடக்கம் செய்தார்கள். இது சம்பந்தமாக வருசநாடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறேன்.

2) 3 ம் பிரதிவாதியின் இறப்பின்போது நான் அங்கு தான் இருந்தேன் என்றாலும் அவர் சடலத்தை தாவா சொத்தில் அடக்கம் செய்யும் போது நான் அங்கு தான் இருந்தேன் என்றாலும் சரியல்ல, நான் சென்னையில் இருந்தேன். காவல் நிலையத்தில் கொடுத்த புகார் சம்பந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், வழக்கறிஞரிடம் கொடுத்திருக்கிறேன். சட்டத்திற்கு புறம்பாக 3 ம்பிரதிவாதியின் சடலத்தை தாவா சொத்தில் அடக்கம் செய்துவிட்டார்கள் என்றும் அதை அகற்ற கோரியும் இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கோரவில்லைஎன்றால் காவல் நிலையத்தில் மட்டும் புகார் கொடுத்துள்ளோம். தாவா சொத்தில் பிரதிவாதிகள் மின் இணைப்பு பெற்றிருக்கிறார்கள் என்றால் சரிதான். அந்த

மின் இணைப்பு ரத்து செய்வதற்கு ஏன் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் எனக்கு படிப்பறிவு இல்லை.

3) தாவா சொத்திற்குள் பிரதிவாதிகள் கல்குவாரி வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். அது சம்பந்தமாக எதுவும் நட வடிக்கை எடுக்கவில்லை என்றால் நான் கேட்டேன் என்னை அடிக்க வந்தார்கள். தாவா சொத்தை பிரதிவாதிகள் எப்போது ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்றால் 1985 ம் ஆண்டிலிருந்து பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து வைத்திருக்கிறார்கள். தாவா சொத்தில் உள்ள மரங்களை நாங்களும் பிரதிவாதிகளும் சேர்ந்து 1990 ம் ஆண்டில் தான் வைத்தோம். தாவா சொத்தில் உள்ள மரங்களை பிரதிவாதிகள் தான் வைத்தார்கள் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் பைப்லைன் அமைத்து பிரதிவாதிகள் மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வருகிறார்கள் என்றால் இருவரும் சேர்ந்து தான் வைத்தோம்.

4) எங்கள் நிலத்திற்கும் தண்ணீர் பாய்கிறது. தாவா சொத்திற்கான மின் கட்டணங்கள் பிரதிவாதிகள் தான் செலுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். ஆனால் மின் இணைப்பு கணக்கு எனது அப்பா பெயரில் இருக்கிறது. தாவா சொத்து ஆதியில் சுப்பையாவிற்கு பாத்தியம் என்றால் சரிதான். சுப்பையாவிற்கு 3 மகன்கள் மற்றும் 3 மகள்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். ஒரு மகள் ராமுத்தாய்க்கு சீர்வரிசை செய்துவிட்டதால் சொத்துக்களில் பாகம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். கருப்பையா என்ற மகன் சிறுவயதிலேயே எங்கோ சென்றுவிட்டார். அவர் எங்கு இருக்கிறார் என்ற விபரம் எங்களுக்கு தெரியாது. சுப்பையாவும் சிங்கராஜும் தனியாக வெட்டி தாவா சொத்திற்கு சிங்கராஜ் பெயரில் பட்டா வழங்கப்பட்டது. தாவா சொத்து சுப்பையாவிற்கு பாத்தியப்பட்டது என்றாலும் அவரின் 2 மகன்கள் மற்றும் 2 மகள்களுக்குபிரித்து கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனது தந்தைக்கு 4 ல் 1 பாகம் தான் பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல.

5) எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட 4 ல் 1 பாகத்தை 1 ம் பிரதிவாதிக்கு வெண்ணிலை பத்திரத்தின் மூலம் எனது அப்பாவும் அம்மாவும் 18.02.1976 ம் தேதி கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எனது பெரியப்பா மகாலிங்கம் அவருக்கான 4 ல் 1 பாகத்தை 1 ம் பிரதிவாதியின் மகன் வேல்முருகனுக்கு கடந்த 24.04.1979 ம் தேதி வெண்ணிலை கிரைய பத்திரம் எழுதி கொடுத்து

பாத்தியப்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. எனது அத்தைகளின் பெயர் சுந்தரம்மாள், லட்சுமி என்றால் சரிதான். அவர்களுக்கும் தாவா சொத்தில் 4ல் 2 பாகம் இருக்கிறது என்றால் சரியல்ல. எனது அத்தைகள் இருவரும் 1ம் பிரதிவாதியின் மனைவிகள் என்றால் சரிதான். மேற்படி எனது இரண்டு அத்தைகளும் அவர்களது பாகத்தை 1ம்பிரதிவாதியான கணவருக்கு வாக்கரலாக பாத்தியப்படுத்திவிட்டார்கள் என்றால் சரியல்ல. உரிமை மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் 1ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்திற்கு பட்டா வழங்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல.

6) 1ம் பிரதிவாதி தனது 2 மனைவிகளோடு சேர்ந்து தாவா சொத்தை 10ம் பிரதிவாதிக்கு கடந்த 15.02.1994ம் தேதி அடமான பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரிதான். அடமானம் வைத்த விபரம் எனக்கு ஒரு மாதம் கழித்து தெரியவந்தது. அதன்பிறகு 10ம் பிரதிவாதி ராஜேஸ்வரியின் மகனான விஜயபாண்டிக்கு 1ம் பிரதிவாதிகளும் அவரது மனைவிகளும் சேர்ந்து கடந்த 05.12.1994ம் தேதி அடமான பத்திரம்எழுதி கொடுத்திருக்கிறார்கள் என்றால் ஆவணம் எழுதி கொடுத்து ஒரு மாதம் கழித்து தெரியவந்தது. ஆவணம் பற்றி எனக்கு தெரியவந்தவுடன் பிரதிவாதியிடம் ஆட்சேபணை செய்தேன். அதற்கு 1ம் பிரதிவாதி தெரியாமல் செய்தவிட்டேன் என்றும் இனிமேல் அவ்வாறு செய்யமாட்டேன் என்று சொன்னார். மேற்படி ஆவணங்கள் பற்றி தெரிய வந்தபிறகு 3 வருடத்திற்குள் ஆவணத்தை ரத்து செய்ய வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

7) அதன் பிறகு மேற்படி அடமானங்களை 24.08.2000 ம் தேதி நாங்கள் பணத்தை கட்டி அடமானம் மீட்கப்பட்டது என்றால் சரிதான். அனைவரும்சேர்ந்து தான் அடமானத்தைமீட்டோம். நான் அடமானத்தை மீட்க பணத்தை கொடுக்கவில்லை என்றாலும் பிரதிவாதி தான் பணம் கொடுத்து அடமானத்தை மீட்டார் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதிகள் கடந்த 17.11.2004ம் தேதி ஒரு பாக் விஸ்தி பத்திரம் ஏற்படுத்தி கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த ஆவணத்திற்கு அப்போதே ஆட்சேபணை தெரிவித்தேனா என்றால் ஆட்சேபணை தெரிவித்தேன். என் பேச்சை கேட்கவில்லை, என்னை அடிக்க வந்தார்கள். மேற்படி ஆவணம் பற்றி தெரிய வந்து 3 வருடத்திற்குள் ஆவணத்தை ரத்து செய்ய நான் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் நான் படிக்கவில்லை அதனால் எனக்கு தெரியவில்லை.

8) எங்கள் ஊரில் சிங்கராஜ் மகன் கணேசன் என்று நான் மட்டும் தான் இருக்கிறேன். வேறு யாரும் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கணேசன் என்ற கையொப்பம் என்னுடையது தான். அந்த ஆவணம் 17.11.2004 ம் தேதி பாக பிரிவினை பத்திரம் என்று காட்டிய போது சாட்சி மாற்றி அந்த கணேசன் நான் இல்லை என்றும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்றும் ஊரில் வேறு கணேசன் இருப்பதாக மாற்றி சொல்கிறார். எங்கள் ஊரில் 3 கணேசன் இருக்கிறார்கள். ஆனால் சிங்கராஜ் மகன் கணேசன் என்பது நான் மட்டும் தான், வேறு யாரும் இல்லை என்று சாட்சி கூறினார். மேற்படி 17.11.2004 ம் தேதி பாக விஸ்தி பத்திரம் பதிவு செய்யும்போது நானும் உடன் இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பாக விஸ்தியில் தாவா சொத்துக்கள் 2, 3 பிரதிவாதிகளுக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

9) தாவா சொத்திற்கு 2, 3 பிரதிவாதிகளின் பெயரில் தான் பட்டா இருக்கிறது என்றால் சரிதான், ஆனால் நாங்கள் தான் அனுபவத்தில் இருக்கிறோம். தாவா சொத்தில் நாங்கள் அனுபவத்தில் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் தென்னை மற்றும் மாங்காய்களை கொடுக்கும் வியாபாரி பெயர் தெரியுமா என்றால் அவர் பெயர் தெய்வம். வியாபாரம் செய்ததற்கான இரசீது எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். தாவா சொத்தில் தென்னை மரம் 70, மாமரம் 80, உலகமரம் 100, வாழை மரம் 20 உள்ளது என்றால் என் சொத்தில் அவ்வளவு மரங்கள் இல்லை. என் சொத்தில் உள்ள மரங்களை நான் தான் வைத்தேன். 3 ம்பிரதிவாதி கடந்த 28.01.2005 ம் தேதி தாவா சொத்தை 12 ம் பிரதிவாதிக்கு எனது ஆட்சேபணையைமீறி அடமானம் வைத்தார்என்றால் சரிதான்.

10) அந்த அடமான பத்திரத்தின் மீது அப்போது நான் எந்த நடவடிக்கையும் எடுககவில்லை என்றால் சரிதான். அதன்பிறகு கடந்த 20.10.2010 ம் தேதி 13 ம் பிரதிவாதிக்கு 3 ம்பிரதிவாதி அடமானம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். அந்த விபரம் அன்றே எனக்கு தெரியும். அது சம்பந்தமாக நான் அவர்களிடம் பிரச்சனை செய்தேன். 2 ம் பிரதிவாதி 28.03.2012 ம் தேதி 9 ம் பிரதிவாதிக்கு அடமானம் வைத்தார் என்றால் சரிதான். அந்த அடமானம் சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. அது எங்கள் சொத்து இல்லை. மேற்படி 3 அடமானங்களையும் பிரதிவாதிகள் தரப்பில் பணம் செலுத்தி மீட்டு விட்டார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்தவற்கு

முன்பு தாவா சொத்தை எனது அப்பா குறைந்த விலைக்கு விற்பனை செய்துவிட்டார் என்றும் அதனால் பிரதிவாதிகளிடம் நான் ரூ.5,00,000/- கேட்டேன் என்றாலும் சரியல்ல.

11) இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகள் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி புகாரை பிரதிவாாதிகள் எனது இடத்திற்கு பட்டா மாற்றிக்கொண்டார்கள் என்றும் தாவா சொத்தை என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பிறகு நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து பிரதிவாதிகள் மீது Crime No.103/2013 ல் வருசநாடு காவல் நிலையத்தில் FIR பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட FIR ல் உள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையா என்று கேட்டால் ஆமாம், உண்மை தான். மேற்படி FIR ல் எங்கள் பூர்வீக நிலங்களை ராசு என்பவருக்கு கிரையம கொடுத்தாக கூறியுள்ளேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது தவறு.

12) 1976 ம் ஆண்டு முதல் 1ம் பிரதிவாதி தான் தாவா சொத்தின் அனுபவத்தில் இருக்கிறார் என்றால் சரியல்ல. 36 வருடங்களாக தாவா சொத்தில் மரங்கள் வைத்து அதன் பலன்களை 1ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் போர் போடும்போது ஏன் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் நான் வெளியூர் சென்றிருந்தேன். வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பு போர் போட்டார்க் ளஎன்றால் சரியல்ல, 2 வருடங்களுக்கு முன்பு தான் போட்டார்கள். தாவா சொத்தில் உள்ள போர் வெல்லை பிரதிவாதிகள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள மரங்களுக்கு அந்தபோர் வெல்லிலிருந்து தண்ணீர் எடுத்து பிரதிவாதிகள் தான் தண்ணீர் பாய்ச்சி வருகிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகளிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

13) பிரதிவாதிகள் ஏற்படுத்திய ஆவணம் அனைத்தும் செல்லும் என்றாலும் அது சம்பந்தமாக காலம் கடந்து கேள்வி எழுப்ப எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் பட்டா சம்பந்தமாக எனக்கு 2013 ம் ஆண்டு தெரியவந்தது. நான் பிரதிவாதிகள் தரப்பில் ஏற்படுத்தியுள்ள ஆவணங்க் ளசெல்லாது என்று கூறிவிட்டு அந்த ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்யாததால் எனது வழக்கு

தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் எங்களுக்கு எந்த உரிமையும் ஏற்படாது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு எந்த ஆவணமும் எனது பெயரில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, எனது அப்பா பெயரில் ஆவணம் உள்ளது. தாவா சொத்திற்கு எனது பெயரில் கிஸ்தி இரசீதுகள் இல்லை என்றால் வழக்கு நிலுவையில் இருப்பதால் கொடுக்கவில்லை. எனது அப்பா பெயரிலுள்ள பட்டாவை வைத்து கொண்டு மட்டும் தாவா சொத்தில் உரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 03.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN Digitally signed by E SUGANTHAN Date: 2026.03.03 13:44:18 +0530

District Munsif,
Aundipatti.